Name of the Newspaper: Dinamalar Date: 30/8/17

# மெட்ரோ ரயில் நிலையங்களில் குடிநீர் மையம், ஏ.டி.எம்., திறப்பு

– நமது நிருபர் –

பயணியர் வருகையை அதிகரிக்கவும், வருவாய் ஈட்டவும், மெட்ரோ ரயில் நிலையங்களில், ஓட்டல், தானியங்கி குடிநீர் இயந்திரங்கள் மற்றும் வங்கி, ஏ.டி.எம்.,கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கி மலையில் இருந்து, கோயம்பேடு வழியாக, நேரு பூங்காவிற்கும்; விமான நிலையத்தில் இருந்து சின்னமலைக்கும், மெட்ரோ ரயில் போக்குவரத்து நடந்து வருகிறது.

இந்த ரயில்களில், தினசரி, 24 ஆயிரம் பேர் வரை பயணம் செய்கின்றனர்.

## கட்டண சலுகை

மெட்ரோ ரயில்களில், பயணியர் வருகையை அதிகரிக்க, நிர்வாகம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. 'டிராவல் ஸ்மார்ட் கார்டு' பயன்படுத்தும் பயணியருக்கு, 10 சதவீதம் கட்டண சலுகை வழங்கப்பட்டது.

கடந்த, 25ம் தேதியில் இருந்து, நாளை வரை, அனைத்து பயணியருக்கும், 20 சதவீதம் கட்டண சலுகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முக்கிய நிலையங்களில், பிரபல நிறுவனங்களின் ஓட்டல்கள் திறக்கப்பட்டுள்ளன.

தானியங்கி இயந்திரம் மூலம், குளிர்பானம், குடிநீர் பாட்டில்கள் வழங்கும் மையங்களும் துவங்கப்பட்டுள்ளன.

இது குறித்து, மெட்ரோ ரயில் அதிகாரி கூறியதாவது:

பாதுகாப்பான, விரைவான பயணத்திற்கு, மெட்ரோ ரயில் சிறந்தது என, மக்கள் உணர வேண்டும். மெட்ரோ ரயில்களில், பயணியர் போக்குவரத்து அதிகரிக்கும் நோக்கில், நிலையங்களில் படிப்படியாக பல வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

## சைக்கிள் வசதி

கோயம்பேடு, அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், ஈக்காட்டு தாங்கல், ஆலந்துார் நிலையங்களில், பிரபல தனியார் நிறுவனங்களின் ஓட்டல் திறக்கப்பட்டுள்ளன.

நிலைய பிளாட்பாரங்களில், தானியங்கி இயந்திரம் மூலம், பிரபல நிறுவனங்களின் குளிர்பானம், குடிநீர் பாட்டில்கள் வழங்கும் மையங்களும் துவங்கப்பட்டுள்ளன. அனைத்து நிலையங்களிலும், வங்கி, ஏ.டி.எம்.,களும் நிறுவப்பட்டுள்ளன.

மெட்ரோ ரயில்களில் வரும் பயணியர், அருகில் செல்ல வேண்டிய இடங்களுக்கு சென்றுவர ஏதுவாக, ஈக்காட்டு தாங்கல், திருமங்கலம் மற்றும் நேரு பூங்காவில், வாடகை இல்லா சைக்கிள் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிகாரி கூறினார்.







■ பயணியரின் வசதிக்காக, மெட்ரோ ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள, ஏ.டி.எம்., மையம். இடம்: வடபழனி. ■ தானியங்கி விற்பனை இயந்திரம். இடம்: அசோக் நகர்.